27 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே.”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 1-4-33

எரிகின்ற இந்தியாமீது எண்ணெய்



Courtesy of "Hindustan Times"

“ஆசியாவில் ஒரு புதிய வேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவும் பற்றிக்கொண்டு எரிந்து கொண்டிருக்கிறது” என்று பார்லிமெண்டில் மிஸ்டர் பால்ட்வின் பேசினார். பாரத நாட்டில் பற்றி யெரிகின்ற அதிருப்தி என்ற நெருப்பை எவ்வாறு அணைப்பது? ஸாமுயேல் ஹோர், ஸர் ஜான் ஸைமன் முதலியவர்களின் வெள்ளைக் கடுதாசி, கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி முதலிய முயற்சிகள் எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றுவது போலத்தான்!

காங்கிரஸ் சாகுமா?

வில்லிங்டன் சரித்திரத்தில் கல்கத்தா காங்கிரசைத் தடுத்த படலம் மிக்க முக்கியமானது. இந்தக் காங்கிரஸ் சம்பந்தமாக நாடெங்கும் எத்தனை பேர் கைதி! எவ்வளவு இடங்களில் அடக்கு முறை! இந்த வருடக் காங்கிரசைத் தடுத்து விட்டால் அத்துடன் காங்கிரசின் முதுகையே முறித்து விடலாமென அதிகார வர்க்கம் மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தது போதும்! ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறோம். இந்திய மக்களின் பிரதிநிதியாக ஒரே ஒரு சபைதான் இந்தியாவில் இருக்கின்றது. அது தான் காங்கிரஸ். அந்தச் சபையின் உதவியின்றி எத்தகைய அரசியலைப் புகுத்த முயன்றாலும் பிரிட்டிஷ் ராஜ தந்திரம் தோல்வி யடைந்தே தீருமென்பதை எச்சரிக்கை செய்கின்றோம்.

"இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்த வேண்டுமென்று பிரிட்டிஷாருக்கு விருப்ப மிருக்குமாயின், காங்கிரஸ் மகாசபை கூடித் தான் அதை முடிவு செய்யவேண்டும். ஆனால் கல்கத்தா காங்கிரஸைக் கூட வொட்டாமல் தடுத்து விட்டீர்களே, அது என்ன நியாயம்?" என்று பார்லிமெண்டில் மிஸ்டர் மார்கன் ஜோன்ஸ் கேட்டார். இதற்கு திமிர் பிடித்த ஹோர் சரியான பதிலேதும் கூறவில்லை.

தேசத்தில் ஏற்பட்டுள்ள மகத்தான அதிருப்தியின் காரணமாகவே கிளர்ச்சிகள் அவ்வப்போது தோன்றுகின்றன. அந்த மூல காரணத்தை அறிந்து கொள்ளாமல் வெறுமனே 'இரும்புக் கையை'க் காட்டி அடிக்கடி மிரட்டுவதால் யாருக்கும் பிரயோஜனமில்லை. பிரிட்டனுடைய பெயர் உலகத்தில் இன்னும் கெடுவது தான் கண்ட பலன்! காங்கிரஸ் மகா சபையோடு சமாதானம் செய்து கொள்ள அரசாங்கம் தயாராக இல்லா விட்டால் பிரிட்டனின் ராஜீய ஜாலங்களத்தனையும் வீணே யன்றோ!

"இந்தியாவில் எல்லா வற்றையும் அடக்கி விட்டோம். என் ஆலோசனையின்படி நடந்ததால் சட்ட மறுப்பு இயக்கம் ஓய்ந்து விட்டது" என்று சர்ச்சில் பார்லிமெண்டில் பேசிக் கொண்டிருந்தான். ஆனால் அதே நேரத்தில் தான் இந்தியாவில் கல்கத்தா காங்கிரஸ் சம்பந்தமாக நூற்றுக் கணக்கானவர்கள் கைதியாகிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதாவது "அடக்கு முறை வழி" தோற்று விட்டது என்பதை பிரிட்டிஷார் ஒத்துக் கொண்டு 'சமரஸ வழி'க்கு வருவார்களா? மாட்டார்களா?

"அடிக்கிறுப் போல அடி! அழுகிறுப் போல அழுகிறேன்"

இரண்டு வக்கீல்கள் சேர்ந்து கூட்டுத் தொழில் நடத்தி வந்தனர். ஜோர்கின்ஸ் என்ற வக்கீல் உள் அறையை விட்டே வெளிக் கிளம்ப மாட்டான். ஸ்பென்லோ என்ற வக்கீல் வெளியே கக்ஷிக்காரனோடு 'பீஸ்' விஷயத்தைப் பற்றி வாதிப்பான். தகராறு வந்து விடும். தனது பாகஸ்தனைக் கேட்டு வருவதாக ஸ்பென்லோ உள்ளே போய் பேசுவான். உள்ளே ஜோர்கின்ஸின் உருமல் பலமாகக் கேட்கும். வெளியே யுள்ள வாடிக்கைக்காரன் அதைக் கேட்டு நடுநடுங்கிப் போவான். சிறிது நேரம் கழித்து ஸ்பென்லோ வெளியே வந்து, "ஐயா நான் என்ன செய்யட்டும்? நமது கூட்டாளி சொன்னதைக் கேட்டீர்களோ இல்லையோ" என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போலப் பசப்புவான். கக்ஷிக்காரன் "இந்த வக்கீல் ஐயா தங்கக் கம்பி" என்ற அபிப்பிராயம் கொள்வதோடு கேட்டதைக் கொடுத்து விட்டுப் போய் விடுவான். இந்தத் 'தங்கக் கம்பி' வக்கீல் இருப்பதனால் வாடிக்கையும் போய் விடாது. இப்படி ஒரு மோசடியான கூட்டுத் தொழிலைப் பற்றி டிக்கன்ஸ் என்ற ஆசிரியர் எழுதி யிருக்கிறார்.

"ஸ்பென்லோ அண்டு ஜோர்கின்ஸ்" என்ற அந்தக் கம்பெனியைப் போலவே இன்று இங்கிலாந்தில் ஹோர் அண்டு சர்ச்சில் கம்பெனியும் இருந்து வருகிறது. இந்த நாடகத்தில் தங்கக் கம்பி போலப் பேசுவதற்கு ஹோர் இருக்கின்றார். உருமுவதற்கு உள்ளே சர்ச்சில் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் பார்லிமெண்டில் வெள்ளைக் கடுதாசியைப் பற்றி விவாதம் நடந்த போது ஸாமுயேல் ஹோர் வெகு திறமையாக நடித்தார். "வெள்ளைக் கடுதாசியில் சொல்லியுள்ள பாதுகாப்புகள் கடுதாசி அளவில் நின்று விடுமா? ஏ! சர்ச்சில் கோஷ்டியே! அவ்வாறு பயப்பட வேண்டாம்,.....இந்திய அன்பர்களே! நான் என்ன செய்யட்டும். இந்த சர்ச்சில் கோஷ்டியின் வாயை அடக்கவே 'பாதுகாப்புகள்' என்ற பகுதியைப் போட்டிருக்கிறேன். அதற்காக எவரும் பயப்பட வேண்டாம்" என்று பொருள்படுமாறு இரு குரலில் பேசினர். பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டும் ஹோரின் சாமர்த்தியமே சாமர்த்தியம்! இந்த நாடகத்தில் ஏமாந்து போகும் மிதவாதிகளின் மடத்தனமே மடத்தனம்!

காமன்ஸ் வம்புகள்

உலகத்திலுள்ள வம்பர் மகாசபையிலெல்லாம் உயர்ந்தது சீமையிலுள்ள காமன்ஸ் சபை. அந்த சபையில் பெரும்பாலோருக்கு இந்தியா கறுப்பா வெளுப்பா என்று அறியாதிருந்த காலம் போய் இப்போது மூன்று நாளைக்கு மூச்சு விடாமல் இந்தியாவைப் பற்றி விவாதம் நடந்ததென்றால் அது ஆச்சரியம் தானே! அன்று சபையின் நடவடிக்கையைக் கவனிப்பதற்கு ஸர்தார் வல்லபாயின் சகோதரரும், ஒரு காலத்தில் இந்தியச் சட்ட சபைத் தலைவருமாயிருந்த வித்தல்பாய் படேலும் வந்திருந்தாராம். வைஸ்ராய் வில்லிங்டனின் குமாரனும் அன்று வந்திருந்தானாம்.

"இந்தியாவின் புதிய அரசியலை நிர்ணயிக்க ஒரு கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியை நியமிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை ஸாமுயேல் ஹோர் முதன் முதலில் நுழைத்தார். அத் தீர்மானத்தை ஆதரித்து அவர் பேசிய பேச்சில் ஸாரமில்லை; ஸத்தே கிடையாது. ஆனால் தன்னைப் பற்றியும், வெள்ளைக் கடுதாசியைப் பற்றியும் அவர் புகழ்ந்து கொண்ட சில வார்த்தைகளை நம்மால் மறக்க முடியாது. அவர் கூறியதாவது :--

ஹோரின் பேச்சு

"இங்கிலாந்தில் என்னைச் சிலர், தேசத்ரோகியென்று அழைக்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ என்னைச் சிலர் கொடுங்கோலன் என்கின்றனர். எப்படியாயினும் இந்தியாவுக்கு நாம் முன்னே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டாமா? அதற்காகத் தான் 'வெள்ளைக் கடுதாசி' என்ற தஸ்தாவேஜு தயார் செய்யப்பட்டது. மேலும் நிலையான ஆட்சியை நடத்துவதற்காக அநேக பாதுகாப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். முன்னொரு காலத்தில் அயர்லாந்து விஷயத்தில் பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொள்ளாததினாலேயே பிறகு ஆபத்து விளைந்ததன்றோ! அத்தகைய தீங்குகள் இந்தியாவில் நேரா. இப்போதிருக்கிற நிலையில் இந்தியாவிலுள்ள தீவிர வாதிகள் அரசாங்கத்தைப் பிடித்துக் கொள்வார்களோ என்ற பயம் கொஞ்சமாவது வேண்டாம்" என்று பொருள்பட நீண்டதொரு பிரசங்கம் செய்தார். சாமுயேல் ஹோரை எதிர்த்து ஏதோ நாலைந்து தொழிற் கட்சி அங்கத்தினர்கள் அழகாகப் பேசினார்களாயினும் கடைசியில் ஹோரின் தீர்மானம் 449 வோட்டுகளால் நிறைவேறி விட்டது. எதிர் வோட்டு 42 தான்!

சேத்த குதிரைக்குச் சாட்டை!

காமன்ஸ் சபையில் முற்றிலும் கன்ஸர்வேடிவ் ஓநாய்களே அதிகம். சிறிது நேரத்திற்கொருதரம் ஒரு கோடியிலிருந்து கொண்டு சர்ச்சில் உறுமிக் கொண்டேயிருந்தான். சர்ச்சிலுக்குச் சாதகமாக அன்று சபையில் பெரிய கும்பலில்லையாம். ஆயினும், 'ஆளில்லா விட்டாலும், பேசுவதற்கு விஷய மில்லா விட்டாலும், இரைச்சலாவது கூக்குரலாவது இருக்கட்டுமே' யென்று சர்ச்சில் நினைத்து நடுவே நடுவே ஊளை யிட்டுக் கொண்டேயிருந்தான்.

அவனுடைய தம்பி கிராடாக் என்ற கிறுக்கன் "ஐயோ வெள்ளைக் கடுதாசா? வெள்ளத்தைத் தடுத்துக் கொண்டிருந்த அணையை உடைத்தெறிந்து விட்டு களிமண் சுவர் எழுப்புவதுண்டா? இந்தியாவில் அடக்கு முறை ஆட்சி செய்யாது அரசியல் அதிகாரங்களை இந்தியர்களிடம் ஒப்புவிப்பது சுத்த தப்பு" என்று கூக்குரலிட்டான். "போலீஸ் அதிகாரங்களை இந்தியர்களிடம் கொடுக்கவே கூடாது" என்று ஹார்ன் என்பான் கோஷ மிட்டான். "35 கோடி மக்களின் வாழ்க்கையை இப்படியும் பகடை ஆடலாமா?" என்று கூறி லார்ட் ஊல்மர் முதலைக் கண்ணீர் சொரிந்தான். இவ்வாறாக இந்தப் பேச்சுகள் முடிவடைந்த பின்பு ஸர் ஜான் ஸைமன் என்ற பிராக்கியன் எழுந்திருந்து தனது சரடை அவிழ்த்தான். ஸைமன் கமிட்டி சிருட்டித்த அந்த யாதாஸ்து குப்பைத் தொட்டியை அடைந்து பல மாதங்களாய் விட்டன. ஆனால் இப்போது ஸைமன் துரை, செத்த குதிரையின் பிணத்தை சவுக்கடி தந்து ஓட்டுவது போல, 'ஸைமன் கமிட்டி முடிவு'களையே சர்க்கார் மறுபடி பின்பற்ற வேண்டுமென முறையிட்டான். இவ்வாறாக விடாது வம்பர் மகா சபை வள வள வென்று பேசிக் கொண்டிருந்தது.

இந்தியாவின் தலையெழுத்தை ஒரு காமன்ஸ் சபையல்ல, ஒரு லார்டு சபையல்ல, அல்லது வேறெந்த சபையும் நிர்ணயித்து விடமுடியாது. ஒரு சர்ச்சிலாலும், ஒரு ஹோரினாலும், ஒரு வில்லிங்டனாலும் இந்தியாவை அடக்கியாளுவதென்பது இயலாத காரியம். ஏனெனில் இந்தியர்களின் தேசபக்தி ஓர் எரிமலை போன்றது. திடீரென்று அம்மலை வெடித்ததாயின், மக்கள் விரும்பாததான எத்தகைய அரசியலும் தவிடு பொடியாகி விடும். ஆகவே இந்தியாவின் தலையெழுத்து இந்தியர்கள் கையில் தானிருக்கிறது என்பதை பிரிட்டன் அறிந்து கொள்ளட்டும்!

திப்புவின் ஈட்டி முனை

சவுக்கடி குலாப்ஜானு?

பம்பாய் சட்ட சபையில் 'சவுக்கடி மசோதாவின்' முதல் பாராயணம் நிறைவேறி விட்டதாம். அதை ஆதரித்து 43 பேரும், எதிர்த்து 20 பேரும் தான் வோட்டு கொடுத்தார்களாம். அந்த 43 பேருக்கும் சவுக்கடி என்றால் என்னவென்று தெரியுமோ! தெரியாதோ? அந்த 43 பேர்வழிகளின் அப்பன்களையும் ஆயாக்களையும் கண்டு பிடித்து, "பார்த்தீர்களா உங்கள் பிள்ளைகளை! சவுக்கடி யென்பதென்ன வென்று ஏன் இவர்களுக்குச் சிறு வயதில் நீங்கள் போதிக்கவில்லை?" என்று கேட்க வேண்டுமென்று தோன்றுகிறது. பாவம் அந்த 43 பேரும் 'சவுக்கடி' என்றால் 'குலாப்ஜான்' விழுங்குகிறாப் போலிருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

வேலியே பயிரழிக்குதே!

தேசத்தில் ஜாதிப் பித்தம் அதிகமாவதற்கு அந்தந்த மாகாணத்தில் மந்திரி வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஆட்களே காரணஸ்தராவர். வங்காளத்தில் கல்வி மந்திரியாக இருக்கின்ற புண்ணியவான் ஹிந்து-முஸ்லீம் சண்டையை அதிகமாக்குவதற்கு சவுகர்யமாக ஒரு வேலை செய்திருக்கின்றான்.

"ஹிந்து உபாத்தியாயர்கள் ஹிந்து மாணவர்களுக்கு மட்டும் சிரத்தையோடு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். மகமதிய மாணவர்கள் பாடு சங்கடமா யிருக்கிறது. ஆகவே இனி கல்லூரிகளில் உபாத்தியாயர் வேலைகள் காலியானல் மூன்றிலொரு பங்கு உத்தியோகங்களை மகமதியர்களுக்கே தர வேண்டுமென்று சர்க்குலர் அனுப்பி யிருக்கின்றேன்" என்று அந்த மந்திரி சொல்லி யிருக்கின்றான். பொறுப்பான உத்தியோகத்தி லுள்ளவன் சொல்லும் வார்த்தைகளா இவை? ஏழை உபாத்தியாயர்களின் வயிற்றெறிச்சலைக் கொட்டிக் கொள்வதில் இந்த மந்திரிக்குத் திருப்தியா? தனக்கு இஷ்டப்பட்ட ஜாதிக்கு இந்த மந்திரி உத்தியோகங்களை விநியோகம் செய்து கொள்ளட்டும். ஆனல் அந்தச் சாக்கில் தாறுமாறாக உபாத்தியாயர்களைக் குறை கூற இவனுக்கு அதிகாரமில்லை யென்பதை உணர வேண்டும். கல்விச் சாலைகளில் ஜாதிப் பித்தம் வளராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியவன் கல்வி மந்திரி! ஆனல் இந்த மதி மந்திரியோ ஜாதிப் பித்தத்தையும், வித்யாசத்தையும் தானே நுழைத்துக் கொண்டிருக்கின்றான். வேலியே பயிரை யழிப்பதா?

ரீடிங்கின் ஜாதி சந்ததியில்

லார்ட் ரீடிங் என்ற மாஜி இந்திய வைஸ்ராய் ஒரு யூதர். அவருடைய ஜாதியினரான யூதர்களை ஜெர்மனியில் ஆலாப் பறக்கடிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. யூதர்களின் கடைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென அங்கு இயக்கம் வலுத்து வருகிறது. இதற்காக பதினாயிரக் கணக்கான பொதுக் கூட்டங்கள் நடக்கப் போகின்றனவாம். இத்தனையையும் பார்த்துக் கொண்டு ஒரு யூதர் எவ்வாறு சகிப்பாரோ? தம்முடைய ஜாதியாரைக் காப்பாற்ற ரீடிங் பிரபு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியைக் கோருவாரா, இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

சிரார்த்த மந்திரம்!

1932-ம் வருஷத்தில், தான் கிழித்த கிழிப்புகளைப் பற்றி சென்னை சர்வ கலாசாலை ஒரு சிராத்த மந்திரம் ஒப்புவித்து விட்டது. போன வருடத்தில் இண்டர்மீடியட் பரீக்ஷைக்கு உட்கார்ந்த 3149 பேர்களில் 2677 பேர் பாஸ் செய்தனரென்றும், 'பி.ஏ.' போன்ற உயர்ந்த பட்டங்கள் 3000 பேருக்கு வழங்கப்பட்டதாகவும், இந்த மாதிரி ஏதோ வெற்றுக் கணக்குகளை சர்வ கலாசாலை அழுதிருக்கிறது. சர்வ கலாசாலையில் பெரிய பட்டங்களை யடைந்தபின்னர் வெளி யுலகத்தில் கஞ்சிக்கு வழியின்றி இளைஞர்கள் அலைவதைக் கண் கூடாகப் பார்க்கிறோம். "சாமான் உற்பத்தி அதிகமாக ஆக அவைகளின் விலைகளும் குறைந்து போகும்" என்று பொருள் நூல் சொல்கின்றது. அதே மாதிரி அளவுக்கு அதிகமாக பி.ஏ.க்கள் தயாரானலும் உத்தியோக மின்றி அவஸ்தைப்பட வேண்டியதுதான். எளிய வாழ்வு, நன்னடத்தை, தேச பக்தி, அத்யாத்மிகம், கைத்தொழில் முதலியவைகளை மாணவர்களுக்குப் புகட்டினலாவது பிரயோசன முண்டு. அத்தகைய கல்வியைப் புகட்டாமல், ஏதோ 'காடே மோடே' என்று கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தால் பிள்ளைகள் உருப்படுமா? தேசம் இருக்கும் நிலையில் பத்து வருடத்துக்கு சர்வ கலாசாலைகளையும், காலேஜுகளையும் பூட்டி வைத்து விட்டதால் தேசத்துக்கு நன்மையே யன்றி, ஆபத்து விளைந்து விடாது என்று அறிஞர் கூறுகின்றனர்.

துண்டு துணுக்குகள்

காந்திஜியின் அபிப்பிராயம்

கோழி, கொக்கு உள்பட இந்தியாவில் எல்லோரும் வெள்ளைக் கடுதாசியைப் பற்றி அபிப்பிராயம் கூறி யாகிவிட்டது. மிகவும் முக்கியமான அபிப்பிராயம் ஒன்றை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அது தான் காந்திஜியின் அபிப்பிராயம். சர்க்கார் அனுமதி தந்தால் தாம் அதைப் பற்றி அபிப்பிராயம் வெளி யிடுவதாகவும் காந்திஜி சமீபத்தில் கூறினார். அவ்வாறு சர்க்கார் அனுமதித்தார்களாவென்று ராஜாங்க சபையில் ஒருவர் கேள்வி கேட்டார். “காந்திஜிக்கு அவ்வாறு அபிப்பிராயம் கூற அனுமதிக்க முடியாது” என்று சர்க்கார் அங்கத்தினர் கூறி விட்டார். காந்திஜியின் அபிப்பிராயத்திடம் சர்க்காருக்கு இத்தனை பயமா? அல்லது அவரென்ன சொல்வாரென்பது பற்றி சர்க்கார் ஜோஸ்யத்தில் அறிந்து கொண்டு விட்டார்களா? ஆனால் காந்திஜியின் அபிப்பிராயம் தான் இந்தியாவின் அபிப்பிராயமென்பதை சர்க்கார் அறியாரோ?

டெயிலி மெயில் ஓலம்

சீமையில் ‘டெயிலி மெயில்’ பத்திராதிபருக்கு பித்த உபத்திரவம் ஜாஸ்தியாகி விட்டது போலிருக்கிறது. அந்த அவஸ்தையில் அவரது பேனா எதெதையோ கக்கி யிருக்கின்றது. பார்லிமெண்டு பேச்சுகளைப் பற்றித் தலையங்கம் எழுதும் போது அவரது பேனா எழுதுவதாவது:—

“ஒரு வைஸ்ராய் கொஞ்சம் தளர்ந்த பேர்வழியா யிருந்தால் பாதுகாப்புகளெல்லாம் அன்றைக்கே கலகலத்துப் போய்விடும். ஆனால் அதே வைஸ்ராய் பாதுகாப்புகளைப் பலமாக உபயோகித்தால் இந்தியத் தீவிர வாதிகளின் கிளர்ச்சி பன்மடங்கு அதிகமாகி விடும். ராஜாங்கம் ஒழுங்காக நடைபெறாது செய்து விடுவார்கள். ஆகவே இந்த வெள்ளைக் கடுதாசி என்ன தெரியுமா? நமது கிழக்கு ராஜ்யங்களின் கிரீடத்தை யெடுத்து, காந்தி யென்பவர் தலையில் சூட்டியது போலவே இந்த வெள்ளைக் கடுதாசி பிரசுரமாகி யிருக்கிறது” என்று அப்பத்திரிகை ஓல மிட்டிருக்கிறது. காந்தி தலையில் கிரீடமாவது? எரவாடா சிறையில் அடைபட்டுக் கிடக்கும் அந்தக் கிழவரைப் பற்றியே சதா எண்ணிக் கொண்டிருக்கும் ‘டெயிலி மெயில்’ பத்திராதிபரை என்னென்பது?

ஹோருக்கு எதிர் மூச்சு

ஸாமுவேல் ஹோரின் பேச்சை எதிர்த்து காமன்ஸ் சபையில் மேஜர் அட்லி என்பாரும் பிறரும் பேசியவை கவனிக்கத் தக்கவை. மேஜர் அட்லி தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். ஸைமன் கமிஷனில் அங்கத்தினரா யிருந்தவர். அவர் பேசியபோது,

“இந்தியர்களோடு சமரசமாகப் போகாவிடில் ஒன்றும் சாயாது. ஆகவே காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மீண்டும் கொண்டு வருவதுதான் சரியான வழி. அரசியற் கைதிகளை விடுதலை செய்வதுதான் முதல் வேலையா யிருக்கவேண்டும். இந்தியருக்கு எப்போதாவது இராணுவ அதிகாரம் தரப் போகின்றோமா இல்லையா யென்பதை வெள்ளைக் கடுதாசி சொல்லவில்லை.” என்று குறிப்பிட்டார்.

அவருடைய பேச்சைத் தழுவி டாம் வில்லியம்ஸ் என்பாரும் பேசினார். டேவிட் க்ரென்பால் என்பார், “கூட்டில் பக்ஷி இறகை மட்டும் விரிக்கலாம்; ஆனால் பறந்து போகக் கூடாது; வாயினாற் பாடவும் கூடாது என்று சொல்வது சரியா? இந்தியாவுக்கு வெள்ளைக் கடுதாசி பிரசாதம் தந்திருப்பது அம்மாதிரி தானிருக்கிறது” என்று சொன்னார்.

பிறகு எச். கே. ஹெல்ஸ் பேசியபோது “இங்குள்ள பெரிய ராஜ்யவாதிகளைச் சிறையில் போட்டு விட்டால் எப்படி யிருக்கும்? அதே மாதிரி இந்தியாவில் முக்கியமானவர்களைச் சிறையி லடைத்திருக்கிறோமே! இது சரியா? இந்தியாவில் காந்திஜிதான் தலைவர். அவர் உதவி கிடைக்காவிடில் எல்லாம் வீண்தான்” என்று குறிப்பிட்டார் மேஜர். மில்னரும் காந்தி விடுதலையைக் கோரினார்.

---

90 லக்ஷம் போத்தல்!

தந்தி, தபால் இலாக்காக்களில் போன வருடத்தை விட, இந்த வருடம் 90 லக்ஷ ரூபாய் குறைந்து போய்விட்டதாக சர்க்கார் அறிக்கை அழுகின்றது. சர்க்காருக்கு ஒரு யோசனை. அதாவது இனி கார்டை ஒன்றரையணா பண்ணட்டும்! முழு வருமானமும் போத்தலாய் விடும். பிறகு இந்தத் தொல்லை பிடித்த இலாகாவையே மூடிவிட்டுத் தூங்கலாம். பொது ஜனங்களுக்கும் கஷ்ட மிருக்காது. ‘கடுதாசி வராது போனால் ஊரில் எல்லோரும் க்ஷேமம்’ என்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டு தள்ளுவார்கள்.

ரயில்வேயில் அக்ரமம்

சர்க்கார் நிருவாகத்திற்கு உட்பட்ட ரயில் வேக்களில், ஏழை இந்தியர்களை மட்டும் வேலையினின்று தூரத்தி வருவது அநியாயமாகும். கொழுத்த சம்பளங்களை வாங்கும் ஐரோப்பியர்களையும், ஆங்கிலோ-இந்தியர்களையும் வெளியே அனுப்பாது குறைந்த சம்பளம் வாங்கும் இந்தியர்களை வெருட்டி யடிப்பது அக்ரமமன்றோ! அஸ்ஸெம்பிளியில் இதைப் பற்றிக் கேள்வி பிறந்தபோது சர்க்கார் தந்த புள்ளி விவரம் பின் வருமாறு:—

G.I.P. ரெயில்வேயில் வேலையினின்று நீக்கப்பட்ட	ஐரோப்பியர்	45
	ஆங்கிலோ-இந்தியர்	133
	இந்தியர்கள்	5475
N.W.R. ரெயில்வேயில் நீக்கப்பட்ட	ஐரோப்பியர்	2
	ஆங்கிலோ-இந்தியர்	22
	இந்தியர்கள்	9229
பர்மா ரெயில்வேயில் நீக்கப்பட்ட	ஐரோப்பியர்	1
	ஆங்கிலோ இந்தியர்	13
	இந்தியர்கள்	2385

இந்தக் கணக்கைப் பார்க்கும்போது வியாக்யானம் வேறு வேண்டுமா? மொத்தத்தில் சுமார் 30 ஆயிரம் இந்தியர்களைக் கல்தா கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஐரோப்பியரும் ஆங்கிலோ-இந்தியரு முள்பட கொழுத்த சம்பளக்காரருள் 200 பேரைத் தான் அனுப்பி யிருக்கின்றனர். இதென்ன அநியாயம்?

"ரயில்வேக்களில் அதிகமாக இந்தியர்களின் தொகை யிருப்பதனால் அவர்கள் அதிகமாக நீக்கப்பட்டிருக்கின்றனர் என்று சாக்குக் கூறத் தலைப் படுவார்கள். ஆனால் ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். ரயில்வேக்களோ இந்திய ரயில்வேக்கள்! ரயில்வேக்கு கிடைக்கும் வரும்படியில் 100க்கு 90 பங்கு இந்த தேசத்தில் பிறந்த இந்தியர்களிட மிருந்தே கிடைத்துக் கொண்டிருக்கிறது. ரயில்வே நிருவாகத்தில் எத்தனையோ அந்நிய நாட்டான்கள் குந்திக் கொண்டிருக்கும்போது இந்தத் தேசத்தில் பிறந்த ஒரு இந்தியன் உத்தியோகத்தை இழப்பானேன்? முதலில் அந்நியர்களுக்கன்றோ சீட்டுக் கொடுக்க வேண்டும்?" என்று "அட்வான்ஸ்" பத்திரிகை எழுதியிருக்கிறது.

துறைமுக தர்பார்

தோலுக்குத் தோல் வித்தியாசம் காட்டும் அநீதி ரெயில்வே நிர்வாகத்தோடு நின்றுவிட்டதென்று எண்ண வேண்டாம். துறைமுக நிர்வாகங்களிலும் அது ஏராளமாக இருக்கிறது. ஒவ்வொரு துறை முகத்தையும் நிர்வகிக்க ஒரு 'போர்டு' உண்டு. கல்கத்தா, கராச்சி, ஏடன் போன்ற பெரிய துறைமுகங்களைச் சேர்ந்த போர்டுகளெல்லாம் ஐரோப்பிய மயமாகவே இருக்கின்றனவாம். மொத்தத்தில் இந்தியாவின் ஏழு துறைமுகங்களிலும் 110 பேரதிகாரிகள் இருக்கின்றனர். அதில் 73 பேர் ஐரோப்பியர்; 37 பேர்தான் இந்தியர்! என்ன அநியாயம். நாட்டின் சுரங்கங்களும், ரயில்வேக்களும், துறை முகங்களும் அந்நியர் கைக்குள்ளேயே இருந்து விட்டால் நாடு உருப்படுவது எங்ஙனம்? நாட்டு மக்கள் முன்னேறுவ தெவ்வாறு?

விலாச மில்லாத தபால்

கடிதத்தை எழுதி, ஸ்டாம்பையும் ஒட்டி, விலாசம் எழுதாமல் தபாற் பெட்டியில் போட்டு விடுகின்ற அண்ணாத்தைகளிடம் நாம் அநுதாபம் காட்ட வேண்டியது தான். அந்தக் கடிதங்களெல்லாம் 'செத்த கடுதாசி' ஆபீஸுக்குப் (D. L. O.) போய் விடுகின்றன. சமீபத்தில் தபால் இலாகா விடுத்துள்ள அறிக்கையில் சென்னை மாகாணத்தைப் பற்றி ஒரு பிரஸ்தாபம் இருக்கின்றது. இம்மாகாணத்தில் அனுப்பப்படும் 109 தபால்களில் ஒரு தபால் வீதம் விலாச மில்லாது பெட்டியில் போடப்பட்டு விடுகின்றதாம்' சர்க்காருக்கு ஸ்டாம்பு வரும்படி என்னவோ வந்து விடுகிறது. ஆனால் கடிதமோ சேர வேண்டிய இடத்தைச் சேருவதில்லை. சென்னை மாகாணந்தான் தனது மெய் மறதிக்காக அபராதம் செலுத்திக் கொண்டே வருகிறான். அட வெட்கமே!

அதிர் வேட்டு அரசர்கள்

ஒரு சுதேச மன்னனின் 'அந்தஸ்தை' எப்படிக் கண்டு பிடிப்பது? அதை குண்டுக் கணக்கினின்று தெரிந்து கொள்ளலா மென்கிறார்கள். 'குண்டுக் கணக்கு' என்றால் அந்த மன்னனைத் தராசில் எடை போட்டுக் கண்டு பிடிப்பதல்ல. அந்தந்த மன்னனுக்கு மரியாதை செலுத்த அதிர் வேட்டுகள் போடப் படுவதுண்டு. உதாரணமாக ஹைதராபாத் நிஜாமுக்கு 21 அதிர் வேட்டு; மைசூர் அரசனுக்கு 21; திருவாங்கூர் வேந்தனுக்கு 19; இவ்வாறு 9 குண்டு அரசர்கள் வரை பல ரகங்களிருக்கின்றனர். ஒரு அரசனுக்கு அந்தஸ்து உயர்ந்தால் உடனே அதிர் வேட்டின் தொகையும் அதிகமாக்கப் படும். உதாரணமாக திருவாங்கூர் அரசனை 21 அதிர் வேட்டுப் பேர்வழியாக பண்ணப் போகிறார்களாம். இப்போது இந்த 'அந்தஸ்து' விவகாரம் சுதேச மன்னர்களிடையே தோன்றி, அது காரமாகிக் கொண்டு வருகிறது.

இந்திய ஐக்கிய அரசியலில், பிரபுக்கள் சபை என்று ஒன்று ஏற்படப் போகின்றதாமே, அந்தச் சபையில் சுதேச அரசர்களின் அந்தஸ்துக்குத் தக்கபடி பிரதிநிதித்துவம் தரப் போகின்றார்களாம். அவ்வளவு தான்! சுதேச அரசர்களுக்குள் கூச்சல் பலமாகி யிருக்கிறது.

புதிய டெல்லியில் சுதேச அரசர்களின் சங்கமான நரேந்திர மகா மண்டலத்தின் கூட்டம் ஒன்று நடந்தது. அன்று 21 குண்டு மரியாதையுடைய பெரிய அரசர்கள் ஒருவராவது காணப் படவில்லை. சின்னச் சின்ன ராஜாக்களே வந்திருந்தனர். பெரிய அரசர்களில் ஒருவராகக் கருதப்படும் போபால் நவாப், முதல் நாளே கம்பி நீட்டி விட்டார். ஆனால் அந்தஸ்தில் உயர்ந்த பிகானீர் ராஜா மட்டும் கடைசி வரை உட்கார்ந்து கொண்டிருந்தாராம். அவர் காரமாகப் பேசிய போதிலும் வைஸ்ராய் கோபித்துக்கொள்ள வில்லையாம். "ருஷியாவை கிடுகிடுக்கச் செய்த ஜார் சக்ரவர்த்தியே போன இடம் தெரியாதபோது, யதேச்சாதிகாரம் இனி உலகில் பலிக்குமா?" என்று அவர் சொன்னாராம். ருஷிய ஜாருக்குப் பின் வில்லிங்டனைத் தான் உலகில் யதேச்சாதிகாரி யென்று சொல்லலாம். ஆனால் அன்று பிகானீர் வார்த்தைக்கு வைஸ்ராய் கோபித்துக் கொள்ளவில்லை.

அன்று மண்டலத்தில் அதிர்வேட்டு அரசர்கள் ஒருவரோடொருவர் போட்டுக் கொண்ட சண்டை எப்படி வளருமோ யார் கண்டது?

சைகோன் செட்டிமார் துயர்

சைகோனிலுள்ள செட்டியார்களின் மீது அங்குள்ள பிரஞ்சு துரைத்தனம் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்ளு மென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அங்கு செட்டியார்கள் அநேக விவசாயிகளுக்கு சில்லறைக் கடன்கள் கொடுத்திருக்கிறார்கள். கடன் கொடுத்தவனுக்குப் பணத்தை வேண்டுமான போது வசூல் செய்ய உரிமை யுண்டல்லவா? ஆனால் அவ்வாறு வசூல் செய்யக் கூடாது என்று சைகோனிலுள்ள பிரஞ்சு துரைத்தனம் ஒரு கடுமையான உத்தரவு போட்டிருக்கிறது. அப்படியானால் அவரவர்கள் கொடுத்த பணத்திற்கு தலை முழுகி விடுவதா என்ன? நான்கு செட்டியார்கள் தாங்கள் கொடுத்த கடனை வசூல் செய்வதற்காக நோட்டீஸ் விடுத்தார்களாம். உடனே அரசாங்கம் நாட்டை விட்டு ஓடும்படி அந்தச் செட்டியார்களுக்கு உத்தரவிட்டு விட்டது.

இந்த மாதிரி சைகோனில் செட்டியார்கள் அனுப்பப்பட்டது வாஸ்தவமா வென்று அன்று இந்தியா சட்ட சபையில் கேள்வி பிறந்தது. சர்க்கார் அதிகாரி கதையை ஆதி முதல் அந்தம் வரை சொல்லி முடித்தார்.

"இந்த அநீதியை நிவர்த்தி செய்யுமாறு பிரான்சு தேச அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் வற்புறுத்தலாகாதா?" என்று ஒருவர் கேட்டார். அப்போது சர்க்கார் அதிகாரி சொன்னார். "அந்த அதிகாரம் இந்திய கவர்ன்மெண்டுக்கு கிடையாது. பிரிட்டிஷ் சர்க்காருக்கு விஷயத்தை அறிவித்திருக்கிறோம். பிறகு நடப்பது நடக்கட்டும்" என்று தட்டிக் கழித்துப் பதில் சொன்னார்.

செட்டியார்கள் நாட்டை விட்டு ஓட்டப் பட்டு விட்டனர். இந்திய கவர்ன்மெண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு எழுதி யிருக்கிறதாம். பிரிட்டிஷார் பிரான்ஸுக்கு எழுதி, பிரான்ஸு சைகோனுக்கு எழுதி, இப்படியாக எழுதி எழுதிக் காலங் கடத்தி விடப் போகிறார்கள். இது தான் நீதியோ?

ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் கஷ்டப்படுத்தப்படுவதைப் பார்த்துக் கொண்டே சும்மா யிருக்கிறது இந்திய சர்க்கார்! அதே மாதிரி தான் சைகோன் விஷயத்திலும் இருக்கப் போகிறது. இப்படி பாராமுகமாகவும், பிற நாடுகளில் இந்தியன் துன்புறுத்தப் படுவதைப் பார்த்துக் கொண்டும் இந்தியாவில் அரசாங்கம் இருந்தென்ன, இல்லாமற் போயென்ன?

கல்கத்தா காங்கிரஸ்

"இம்மாதம் நடக்க விருக்கும் கல்கத்தா காங்கிரஸிற்கு அக்கிராசனம் வகிக்கப் போகப் புறப்பட்டால் போக அநுமதிக்கப்பட மாட்டீர்" என்று பண்டித மாளவியாவுக்கு காசி மாஜிஸ்திரேட்டு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

28உ யன்று கல்கத்தாவில் வந்திறங்கிய 5 சென்னைப் பிரதிநிதிகள் உள்பட 56 பேர்களையும் கைது செய்ததில் 15 பேருக்குத் தண்டனை. வரவேற்புக் கமிட்டித் தலைவருக்கும், பொதுக் காரியதரிசிக்கும் தலா 6 மாதம் கடுங்காவல்.

நாகபுரியில் மொத்தம் 68 பிரதிநிதிகள், எல்லூரில் சத்திய நாராயணா, லாகூரில் 10 அகாலியர்கள், காசியிலிருந்து வந்த மூவர், ராஜேந்திர சந்திரர், பொதுஜன ஊழியச் சங்கக் காரியதரிசியான லாலா ஜகன்னாத் முதலியவர் கைதியானார்கள்.

தேவதாஸ் காந்தி, மற்றும் 30 பிரதிநிதிகள், பிரதாப்ஸோஷ் பிரதிநிதிகள் ஐவர்; கால் நடையாக வந்த ஏழு ஸ்திரீகள் உள்பட இருபத்தி ஆறு பிரதிநிதிகள்; அகாலித் தலைவர் சர்தார் ஹஸாரா சிங்கும் கைதியானார்கள்.

காங்கிரஸ் ஆக்டிங் தலைவர் ஸ்ரீமான் ஆனே காங்கிரசுக்காக கல்கத்தாவுக்குச் செல்லும் போது கரக்பூரில் கைது செய்யப்பட்டார். கல்கத்தாவில் பல வீடுகள் சோதனை யிடப்பட்டு 60 தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். வரவேற்புக் கமிட்டி மூன்றுவது தலைவர் சுரேஷ் மஜூம்தாரும், அங்கத்தினர் ஒருவரும், மற்றும் 20 பேர்களும் கைதி. டாக்டர் ஆலத்தை இரண்டு நாளைக்கு வெளியே போகக் கூடாதென்ற உத்திரவை மீறியதற்காக அலிப்பூர் சிறைக்கு அனுப்பி விட்டனர். ஆரம்பாக் பிரதிநிதிகள் 5 பேர், பகர்ஹட் பிரதிநிதிகள் 22 பேர், இரண்டு அகாலி தலைவர்கள்; ஆறு மகாராஷ்டிரப் பிரதிநிதிகள் கைதியாயினர்.

பி. எம். நாயுடு உள்பட பன்னிருவரும்; இரண்டு ஸ்திரீகளும், மதராஸி ஹோட்டலை சோதனை யிடும்போது மூன்று கேரள பிரதிநிதிகளும் கைது செய்யப்பட்டனர். பம்பாயிலிருந்து புறப்பட்ட 6 ஸ்திரீகள் கைதி.

டெல்லியில் 3 காங்கிரஸ்காரர்களின் வீடுகள் சிவப்புத் துண்டுப் பிரசுரம் சம்பந்தமாக சோதனை யிடப்பட்டன.

டிக்கட் கொடுக்காதே

கல்கத்தா காங்கிரஸிற்குப் போவதாகச் சந்தேகிக்கும் நபர்களுக்கு டிக்கட்டு கொடுக்கக் கூடாதென்று அலகாபாத் ஜில்லாவிலுள்ள எல்லா ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கும் சூப்பிரண்டு நோட்டீஸ் அநுப்பி யிருக்கின்றார்.

கல்கத்தாவில் பல மிலிட்டரி உத்தியோகஸ்தர்கள் போலீஸ் சூப்பிரண்டு உத்தியோகம் பார்க்கும்படி உத்திரவிடப் பட்டிருக்கின்றனர்.

நோட்டீஸ்

சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தின் டிரஸ்டிகளில் ஒருவராகிய ஸ்ரீயுத மகாதேவ தேசாயிக்கு, ஆசிரம நிலத்தின் வரி பாக்கி கொடாமைக்காக நோட்டீஸ் சாதரா செய்யப்பட்டது.

கண்ணனூரில் தடை யுத்திரவு

எப்பிரல் முதல் வாரத்தில் நடக்க விருக்கும் கேரள ராஜிய மகா நாட்டுக்கு உதவி செய்பவர்களை பிரசிகூஷன் செய்யப்படும் என்று சர்க்கார் தண்டோரா மூலியமாக அறிவித்திருக்கின்றனர்.

ஆலமரத்தின் மீதேறி பஜனை செய்து பிரசங்கித்த இரு தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். பலருக்குப் பிரம்படி.

தண்டனை அடைந்தவர்கள்

மதுரையில் மூன்று தொண்டர்களுக்கு வரி கொடாமைத் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக தலா 1 மாதம் கடுங்காவல்.

ஆமதாபாத்தில் போலீசாரிடம் வந்து ஆஜராகாததற்காக மாயா பாஹி என்பவருக்கு ஒரு வருஷமும் 200 ரூபாயும்.

தாண்டி தினம்

தாண்டி தின சம்பந்தமாக பாட்னாவில் 43 பேர்கள் கைது செய்யப்பட்டு தலா 6 மாதம் தண்டனை யடைந்தார்கள்.

சிறையிலிருக்கும் எல்லைப் புற காந்திக்கும் அவர் தம்பிக்கும் பேட்டி காணவும், தபால்கள் கொடுக்கவும் அநுமதிக்கப்பட வில்லையாம்.

ஜெர்மனியில் கைதியான நம்பியார் என்னும் இந்தியர் விடுதலை செய்யப் பட்டார். ஒரு வாரத்துக்குள் வெளியே போய் விடவேண்டுமென்றும் உத்திரவு.

தர்பங்கா மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டில் கொடி போட்டதற்காக மூவர் கைதி. லக்ஷ்மணபுரியில் 30 பேர்கள் கைதி. ராஜமகேந்திரபுரத்தில் 2 பேர் கைதி.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.